OFFICE OF THE FOOD SAFETY OFFICER
DATE: 11/4/17
ALWARTHIRUNAGARI BLOCK

தூத்துக்குடி மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: திரு. மா. இராஜையா.,

ந.க.உ.பொ.1/18336/2015

நாள்: 06-03-.2017

பொருள்: உணவு பாதுகாப்பு சட்டம் மற்றும் தர நிர்ணயம் - தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை- தூத்துக்குடி மாவட்டம் - ஆழ்வார்திருநகரி வட்டாரம், தென்திருப்பேரை பகுதியில் 03-12-2014 அன்று குற்றாலிங்கம் மளிகை ஸ்டோரில் Bhavani iodised crystal salt உணவு மாதிரியாக எடுத்து ஆய்வு செய்ததில் prohibited and Restricted என அறிக்கை பெறப்பட்டது. அதன் அடிப்படையில் உப்பு நிறுவனத்தின் மீது உணவு பாதுகாப்பு தர நிர்ணயச் சட்டம் 2006 - குற்றச்சாட்டு சமர்ப்பித்தல்- தொடர்பாக

படிக்கப் பட்டவை:
1. உணவு பாதுகாப்பு அலுவலர், ஆழ்வார்திருநகரி வட்டாரம், தூத்துக்குடி நாள் இல்லை.
2. இவ்வலுவலக விசாரணை அறிவிப்பு உ.பொ.1/18336/2015 நாள்: 11.06.2015, 31.07.2015 மற்றும் 06.02.2017
3. தொடர்புடைய ஆவணங்கள்.

*******

ஆணை:

தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரி வட்டாரம், தென்திருப்பேரை பகுதியில் 03-12-2014 அன்று குற்றாலிங்கம் மளிகை ஸ்டோரில் Bhavani iodised crystal salt உணவு மாதிரியாக எடுத்து ஆய்வு செய்ததில் prohibited and Restricted என அறிக்கை பெறப்பட்டுள்ளது அதன் அடிப்படையில் உப்பு நிறுவனத்தின் தயாரிப்பாளர் மற்றும் ஸ்டோரின் உரிமையாளர் மீது கீழ கண்டவாறு குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

9520514886
9448509011

| வ.எண் | எதிரியின் விபரம் | குற்றத்தின் விபரம் |
|---|---|---|
| 1 | திரு. பி.குற்றாலிங்கம், த/பெ.பிச்சையா தி/ள்.குற்றாலிங்கம் மளிகை ஸ்டோர் 26, ஆத்தூர் ரோடு, தென்திருப்பேரை --628623 | 2006 வருட உணவுபாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்ட பிரிவு 50,53,58 மற்றும் உடன் இணைந்த பிரிவுகள் ,**26(1)(2)(ii)(iii)(iv),** மற்றும் **27(1), 27(2) (b) (e),** மற்றும் உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் ( பொட்டலம் மற்றும் லேபிள் )ஒழுங்குமுறைகள் 2011-ன் 2.2.1(3) உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் (விற்பனை செய்ய தடை மற்றும் கட்டுப்பாடு) ஒழுங்குமுறைகள் 2011ன் 2.3.12 |
| 2. | திரு.வெ.முத்துமாலை த/பெ.வெள்ளையா சப்ளையர்:தி/ள் ரதி ஸ்டோர்ஸ் காளியம்மன் கோவில் தெரு தென் திருப்பேரை- 628623. | |
| 3 | திரு.செ.கருணாநிதி த/பெ.பி.செந்தில்வேல் விநியோகஸ்தர்: தி/ள் எஸ்.கே.என். டிரெடர்ஸ், 1/371-A மெயின்ரோடு பாவூர்சத்திரம் - 627808 | |
| 4 | கே.ஆர்.வாசுதேவன், த/பெ.ரத்தினசாமி தயாரிப்பாளர்: தி/ள் காவேரி சால்ட் கம்பெனி (சுமங்கலி திருமண மண்டபம் பின் பக்கம், சிவந்தாகுளம் ரோடு, தூத்துக்குடி) 64/4, சந்தை ரோடு தூத்துக்குடி-628001 | |

பட்டியலில் கண்ட எதிரிகள் அவர்களுக்கு எதிரில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை மீறியுள்ளார்கள்.

ஆகையால் எதிரிகளுக்கு இவ்வழக்கு தொடர்பாக விசாரணைக்கு ஆஜராகத் தெரிவித்து பார்வை 2ல் கண்டுள்ளபடி அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதன்படி விசாரணைக்கு பட்டியலில் கண்ட நபர்கள் நேரில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்கள்.

திரு. பி.குற்றாலிங்கம், த/பெ.பிச்சையா என்பவரின் வாக்குமூலம்:

தான் 26, ஆத்தூர் ரோடு, தென்திருப்பேரை என்ற முகவரியில் 10 வருடங்களாக மளிகை ஸ்டோர் நடத்தி வருவதாகவும் 03.12.2014 அன்று தனது மளிகை ஸ்டோரில் ஆழ்வார்திருநகரி உணவு பாதுகாப்பு அலுவலர் உணவுபொருளான உப்பினை எடுத்து ஆய்வு செய்தபோது அதில் அயோடின் குறைவாக இருப்பதாக கூறி அந்த உப்பினை விற்பனை செய்யகூடாது எனவும் கூறியதாகவும் தனக்கும் இந்த குற்றத்திற்கும் தொடர்பு இல்லை என்றும் இதற்கு தயாரிப்பாளரே முழு பொருப்பாவார் எனவே தன்னை இவ்வழக்கிலிருந்து விடுவிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுகொள்வதாக தெரிவித்துள்ளார்.

திரு.வெ.முத்துமாலை த/பெ.வெள்ளையா என்பவரின் வாக்குமூலம்:

தான் தென்திருப்பேரை கிராமம் காளியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் 7 ஆண்டுகளாக ரதி ஸ்டோர்ஸ் நடத்தி வருவதாகவும் 03.12.2014 அன்று திரு. குற்றாலிங்கம் அவர்களின் மளிகை கடையில் உணவு பாதுகாப்பு அலுவலர் உணவுப்பொருளான உப்பினை எடுத்து ஆய்வு செய்யும்போது அதில் அயோடின் இல்லை என்றும் அதனை விற்பனை செய்யக்கூடாது என அறிவுறுத்தியதாகவும் அந்த உப்பினை சப்ளை செய்த காரணத்தினால் தன்னையும் இவ்வழக்கில் சேர்த்துள்ளார் தனக்கும் இந்த குற்றத்திற்கும் தொடர்பு இல்லை என்றும் இதற்கு தயாரிப்பாளரே முழு பொருப்பாவார் எனவே தன்னை இவ்வழக்கிலிருந்து விடுவிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுகொள்வதாக தெரிவித்துள்ளார்.

திரு.செ.கருணாநிதி த/பெ.பி.செந்தில்வேல் என்பவரின் வாக்குமூலம்:

தான் மேற்கண்ட முகவரியில் எஸ்.கே.எண். டிரேடர்ஸ் எட்டு ஆண்டுகளாக நடத்தி வருவதாகவும் 03.12.2014 அன்று திரு. குற்றாலிங்கம் மளிகை ஸ்டோரில் ஆழ்வார்திருநகரி உணவு பாதுகாப்பு அலுவலர் உணவுப்பொருளான உப்பினை எடுத்து ஆய்வு செய்ததாகவும் அதில் Bhavani iodised crystal salt ன் 1Kg அளவுள்ள உப்பு பாக்கெட் எடுத்து ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டதாகவும் அந்த ஆய்வின் முடிவில் Bhavani iodised crystal salt ல் அயோடின் சத்து குறைவாக உள்ளதாக தெரியவந்ததாகவும் எனவே உணவு பாதுகாப்பு அலுவலர் குற்றாலிங்கம் மளிகை ஸ்டோருக்கு சென்று மேற்படி உப்பில் அயோடின் சத்து இல்லை என்று கூறியதாகவும் அவர் விசாரனையின் அடிப்படையில் விநியோகஸ்தரரான தன்னையும் இவ்வழக்கில் சேர்த்துள்ளதாகவும் தயாரிப்பாளர் திரு. கே.ஆர்.வாசுதேவன் என்பவரிடமிருந்து ஒப்பந்தத்தின் அடிப்படையில் கடந்த 10 மாதங்களாக உப்பு பாக்கெட் மொத்தமாக பெற்று விநியோகம் செய்து வந்ததாகவும் 25-09-2014 அன்று உப்பு பாக்கெட் மொத்தமாக பெற்று விநியோகம் செய்ததுதான் எனக்கும் தயாரிப்பாளருக்குமுள்ள இறுதி ஒப்பந்தமாகும் அதன் பிறகு அவரிடமிருந்து எந்தவிதமான தொடர்பும் இல்லை இது முழுவதும் தயாரிப்பாளரின் பொறுப்பாகும் என்றும் தான் இதனை ஆய்வகத்திற்கு அனுப்பி ஆய்வு செய்ய தேவையில்லை இந்த உப்பு பாக்கெட்டில் 40Ppm அளவு அயோடின் இருப்பதாக தயாரிப்பாளர் ஒப்பந்தத்தில் தெரிவித்துள்ளதாகவும் அந்த ஒப்பந்த நகலை தான் இனைத்துள்ளதாகவும் தனக்கும் இந்த குற்றத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் தன்னை இவ்வழக்கிலிருந்து விடுவிக்கும்படியும் பணிவுடன் கேட்டுள்ளார்.

கே.ஆர்.வாசுதேவன், த/பெ.ரத்தினசாமி என்பவரின் வாக்குமூலம்:

தான் 64/4, சந்தை ரோடு தூத்துக்குடி என்ற முகவரியில் வசித்து வருவதாகவும் தனது பெயரில் தனது சகோதரரின் மகன் தினேஷ் என்பவர் தி/எ. காவேரி சால்ட் கம்பெனி என்ற உப்பு தயாரிப்பு நிறுவனம் நடத்தி வருவதாகவும் தான் தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார் திருநகரி வட்டாரம் தென்திருப்பேரை பகுதியில் குற்றாலிங்கம் மளிகை ஸ்டோரில் Bhavani iodised crystal salt விற்பனை செய்திருந்ததாகவும் மேற்படி கடையில் 03.12.2014 அன்று ஆழ்வார் திருநகரி வட்டார உணவு பாதுகாப்பு அலுவலர் ஆய்வு செய்து மேற்படி உப்பில் அயோடின் இல்லாதது சோதனையில் கண்டறிந்து உரிய அளவு அயோடின் சேர்க்க அறிவுறுத்தியதாகவும் அதன்பின்பு

போதய அளவு அயோடின் சேர்த்து தரத்தை உயர்த்தியதாகவும் எனவே இந்த ஒருமுறை மட்டும் தன்னை மன்னித்து இந்த வழக்கிலிருந்து விடுவிக்கும்படி பணிவுடன் கேட்டுள்ளார்.

எதிரிகளின் வாக்குமூலம் மற்றும் அனைத்து ஆவணங்கள் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

பட்டியலில் வ.எண். 1 முதல் 3 வரையுள்ள எதிரிகளின் குற்றம் நிருபணமாவதால் எதிரிகளுக்கு தலா ரூ. 5000/- (ரூபாய் ஐந்தாயிரம்) வீதம் மொத்தம் ரூ.15000/- ( ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) அபராதம் விதித்தும் பட்டியலில் வ.எண். 4-ல் கண்ட எதிரியின் குற்றம் நிருபணம் ஆவதால் ரூ.15000/- ( ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) அபராதம் விதித்தும் அபராதத்தொகையினை கீழ்கண்ட கணக்கு தலைப்பில் செலுத்தி அசல் செல்லானை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி உத்தரவிடப்படுகிறது.

இந்த ஆணை மீது மேல்முறையீடு செய்ய விரும்பினால், இந்த ஆணை கிடைக்கப்பெற்ற 30 (முப்பது) தினங்களுக்குள் உணவு பாதுகாப்பு ஆணையர், தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை, 359 DMS காம்ளக்ஸ், அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை-600006 அவர்களுக்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

"0210. Medical and public Health – 04.
public Health – 800. other Receipts- I.
Non-plan-AN. Food Safety Wins – Penalties"
(D.P. Code-0210-04-800-AN-0000)

ஒம்/- மா.இராஜையா.,
மாவட்ட வருவாய் அலுவலர் (பொ),
தூத்துக்குடி.

/உ.ந.உ.ப/

7/3/17.
மாவட்ட வருவாய் அலுவலருக்காக

பெறுநர்

1 திரு. பி.குற்றாலிங்கம், த/பெ.பிச்சையா
தி/ள்.குற்றாலிங்கம் மளிகை ஸ்டோர்
26, ஆத்தூர் ரோடு, தென்திருப்பேரை–628623

2 திரு.வெ.முத்துமாலை, த/பெ.வெள்ளையா
சப்ளையர்:தி/ள் ரதி ஸ்டோர்ஸ்
காளியம்மன் கோவில் தெரு, தென் திருப்பேரை- 628623.

3 திரு.செ.கருணாநிதி, த/பெ.பி.செந்தில்வேல்
வினியோகஸ்தர்: தி/ள் எஸ்.கே.என். டிரெடர்ஸ், 1/371-A மெயின்ரோடு
பாவூர்சத்திரம் - 627808

4 கே.ஆர்.வாசுதேவன், த/பெ.ரத்தினசாமி
தயாரிப்பாளர்: தி/ள் காவேரி சால்ட் கம்பெனி (சுமங்கலி திருமண மண்டபம் பின் பக்கம், சிவந்தாகுளம் ரோடு, தூத்துக்குடி) 64/4, சந்தை ரோடு
தூத்துக்குடி-628001

நகல்:

1. உணவு பாதுகாப்பு ஆணையர், தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை, 359 DMS காம்ளக்ஸ், அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை-600006
2. மாவட்ட நியமன அலுவலர், உணவு பாதுகாப்பு பிரிவு, தூத்துக்குடி
3. உணவு பாதுகாப்பு அலுவலர், ~~சாத்தான்குளம்~~ வட்டாரம், தூத்துக்குடி.
4. உபரி - 1